[1981 ஆகஸ்ட் 22

குழந்தைகள் நோஞ்சான்களாக இருக்கின்றன. அதனால் பெண்களுக்கும் புற்று நோய் போன்ற நோய்கள் வருவதாக சொல்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பால்பவுடர் போன்ற குழந்தை உணவுகளை தயாரிக்கும்போது, 'தாய்ப்பால் உணவுதான் குழந்தைகளின் உடல்நலத்திற்கு சிறந்தது' என்று அந்த டின்களில் அச்சடித்து விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சார்பில் இன்றைக்கு எவ்வளவு பால் பவுடர் உற்பத்தி செய்கிறார்கள்? அதிலே தன்னிறைவு அடைந்திருக்கிறோமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள ஏழைத்தாய்மார்கள் தொடர்ந்து தங்களுடைய குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வாங்குவதற்கு ஏற்ற முறையில், விலையைக் குறைத்து விற்பதற்கு பால் பவுடர் உற்பத்தி செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று கருதுகிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காடுகளில் இறந்துபோகும் யானைகளைப் பரிசோதனை செய்யும் முறை.

*வினா எண். 6—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகளில் யானைகள் சுடப்பட்டால் அல்லது செத்துவிட்டால் அதை மிருக வைத்திய நிபுணர்கள் சட்டப்படி பரிசோதனை செய்யும் வழக்கமுண்டா ?

1981 ஆகஸ்ட் 22]

(ஆ) ஆம் எனில், எதற்காக அந்தப் பரிசோதனை செய்யப்படுகிறது?

(இ) பரிசோதனை அறிக்கைகள் யாருக்கு அனுப்பப்படுகின்றன?

(ஈ) அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) இறந்ததற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்காக பரிசோதனை செய்யப்படுகிறது.

(இ) அந்தந்த மாவட்ட வன அலுவலர், மண்டல வனப் பாதுகாவலர், கோவை தலைமை வனவிலங்கு பாதுகாவலர் ஆகியோர்கட்கு அனுப்பப்படுகிறது.

(ஈ) யானைகள் சுடப்பட்டாலோ அல்லது சுடப்பட்டு இறந்தாலோ சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின்மீது வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழ்நாட்டைச் சுற்றியிருக்கிற காடுகளில் எத்தனை யானைகள் சுடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யானைகள் எத்தனை சுட்டுக் கொல்லப்பட்டன என்பதற்கெல்லாம் கணக்குச் சொல்ல முடியுமா? துணைக் கேள்விகளை மூலக் கேள்வியோடு ஒட்டியபடி கேட்க வேண்டும்.

[முற்பகல் 9-20]

திரு. மு. அம்பிகாபதி : யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். அதேபோல் யானைகளைச் சுடுகிறவர்கள் மீது எத்தகைய கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : யானையைச் சுடுகிறவர்கள்மீது வன விலங்கு பாதுகாப்புச் சட்டப்படி, விதி 51-ன் கீழ் ஆறு மாதத்திற்குக் குறையாது ஆறு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்கப்பட வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளின் உள்ளம் எப்படி இருக்கிறதோ அப்படி தண்டனை தரப்படுகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பத்தாண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட தற்போது தமிழகத்தில் உள்ள காடுகளில் இருக்கிற யானைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த வினாவிற்கான விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. என். பழனிவேல் : தமிழகத்தில் உள்ள காடுகளில் யானைகள் மற்றும் தேசிய மிருகங்கள் எவ்வளவு உள்ளன என்ற கணக்கை அரசு அறிவிக்க முடியுமா? அதனால் அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தனியாகக் கேள்வி போட்டால் தகவலைத் திரட்டித் தர இயலும்.

திருஉத்திரகோசமங்கையிலுள்ள அருள்மிகு மங்களநாத சுவாமி ஆலயம்.

* வினா எண். 7—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருஉத்திரகோசமங்கையில் உள்ள கோவிலில் உள்ள நடராஜர் சிலை 'மரகதத்தால்' ஆனது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அந்த சிலையின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்த கோவிலின் திருப்பணிக்கு அரசு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) & (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருஉத்திரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி ஆலயத்திலுள்ள நடராஜர் சிலை விசேஷமான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS